سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ ﴿۴۵﴾ بَلِ السَّاعَةُ مَوْعِدُهُمْ وَالسَّاعَةُ
اَدْهٰى وَاَمَرُّ ﴿۴۶﴾ اِنَّ الْمُجْرِمِيْنَ فِيْ ضَلٰلٍ وَّسُعُرٍ ﴿۴۷﴾ يَوْمَ يُسْحَبُوْنَ وقف لازم
فِي النَّارِ عَلٰى وُجُوْهِهِمْ ؕ ذُوْقُوْا مَسَّ سَقَرَ ﴿۴۸﴾ اِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنٰهُ
بِقَدَرٍ ﴿۴۹﴾ وَمَآ اَمْرُنَآ اِلَّا وَاحِدَةٌ كَلَمْحٍۭ بِالْبَصَرِ ﴿۵۰﴾ وَلَقَدْ اَهْلَكْنَآ
اَشْيَاعَكُمْ فَهَلْ مِنْ مُّدَّكِرٍ ﴿۵۱﴾ وَكُلُّ شَيْءٍ فَعَلُوْهُ فِي الزُّبُرِ ﴿۵۲﴾ وَ
كُلُّ صَغِيْرٍ وَّكَبِيْرٍ مُّسْتَطَرٌ ﴿۵۳﴾ اِنَّ الْمُتَّقِيْنَ فِيْ جَنّٰتٍ وَّنَهَرٍ ۙ ﴿۵۴﴾
فِيْ مَقْعَدِ صِدْقٍ عِنْدَ مَلِيْكٍ مُّقْتَدِرٍ ﴿۵۵﴾ ع ۳ ۱۵ ۱۰

## سُوْرَةُ الرَّحْمٰنِ مَدَنِيَّةٌ وَّهِيَ ثَمَانٍ وَّسَبْعُوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلرَّحْمٰنُ ۙ ﴿۱﴾ عَلَّمَ الْقُرْاٰنَ ؕ ﴿۲﴾ خَلَقَ الْاِنْسَانَ ۙ ﴿۳﴾ عَلَّمَهُ الْبَيَانَ ﴿۴﴾
اَلشَّمْسُ وَالْقَمَرُ بِحُسْبَانٍ ۙ ﴿۵﴾ وَّالنَّجْمُ وَالشَّجَرُ يَسْجُدٰنِ ﴿۶﴾ وَالسَّمَآءَ
رَفَعَهَا وَوَضَعَ الْمِيْزَانَ ۙ ﴿۷﴾ اَلَّا تَطْغَوْا فِي الْمِيْزَانِ ﴿۸﴾ وَاَقِيْمُوا
الْوَزْنَ بِالْقِسْطِ وَلَا تُخْسِرُوا الْمِيْزَانَ ﴿۹﴾ وَالْاَرْضَ وَضَعَهَا
لِلْاَنَامِ ۙ ﴿۱۰﴾ فِيْهَا فَاكِهَةٌ وَّالنَّخْلُ ذَاتُ الْاَكْمَامِ ۖ ﴿۱۱﴾ وَالْحَبُّ
ذُو الْعَصْفِ وَالرَّيْحَانُ ﴿۱۲﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۱۳﴾

45. (இக்) கூட்டத்தினர் தோற்கடிக்கப்படுவார்கள்; புறமுதுகிட்டும் ஓடுவார்கள்.
46. அதுவுமின்றி, மறுமைநாள் இவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட காலமாகும்; மறுமை நாள் இவர்களுக்கு மிகப் பயங்கரமானது, மிக்க கசப்பானதுமாகும்.
47. நிச்சயமாகக் குற்றவாளிகள் வழிகேட்டிலும், பைத்தியத்திலும் இருக்கின்றனர்.
48. இவர்கள் நரகத்திற்கு முகங்களின்மீது இழுத்து செல்லப்படும் நாளில், இவர்களிடம், (நீங்கள்) "நரக நெருப்பின் தீண்டுதலைச் சுவைத்துப்பாருங்கள்" (என்று கூறப்படும்).
49. நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும், (நிர்ணயிக்கப்பட்ட) அளவின்படியே படைத்திருக்கின்றோம்.
50. நம் கட்டளை (நிறைவேறுவது) கண் சிமிட்டுவதுபோன்ற ஒரு கணமே தவிர இல்லை.
51. (மக்காவாசிகளே!) உங்களைப்போன்ற (எத்தனையோ) வகுப்பார்களை நாம் நிச்சயமாக அழித்திருக்கின்றோம். ஆகவே, (உங்களில்) படிப்பினை பெறக்கூடியவர் உண்டா?
52. அவர்கள் செய்துவிட்ட ஒவ்வொரு விஷயமும் (பதிவு செய்யப்பட்டு அவர்களுடைய) குறிப்பேடுகளில் இருக்கின்றது.
53. ஒவ்வொரு சிறிதும், பெரிதும் (அதில்) வரையப்பட்டிருக்கும்.
54. நிச்சயமாக, பயபக்தியுடையோர் சுவனபதிகளிலும், (அவற்றிலுள்ள) ஆறுகளிலும் இருப்பார்கள்.
55. (மெய்யாகவே) மிக்க உண்மையான இருக்கையில், மிக்க சக்தி வாய்ந்த அரசனிடத்தில்இருப்பார்கள்.

---

அத்தியாயம் : 55

## அர்ரஹ்மான் _ அளவற்ற அருளாளன்

வசனங்கள் : 78 மதனீ ருகூஃகள் : 3

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. அளவற்ற அருளாளன்,
2. குர்ஆனை அவன் கற்றுக் கொடுத்தான்.
3. அவனே மனிதனைப் படைத்தான்.
4. அவனே அவனுக்கு (அவன் பேசும் மொழியின்) விளக்கத்தைக் கற்றுக்கொடுத்தான்.
5. சூரியனும், சந்திரனும்கணக்கின் படி (செல்கின்றன).
6. செடி (கொடி) யும், மரமும் _அவ்விரண்டும் (அல்லாஹ்வுக்கு வழிபட்டுச்)சிரம் பணிகின்றன.
7. இன்னும்,வானத்தை_அதனை அவன் உயர்த்தி, தராசை(நீதியை)யும் வைத்தான்.
8. நீங்கள் தராசில்(நிறுப்பதில்) வரம்பு மீறாதிருப்பதற்காக;
9. அன்றியும், நீங்கள் எடையை நீதியுடன் நிறுங்கள்; தராசில் (அளவையில்) குறைத்தும் விடாதீர்கள்.
10. மேலும், பூமியை படைப்புகளுக்காக(வசித்திருக்க வசதியாக) அவனே அதனை (விரித்து)வைத்தான்.
11. அதில் (பலவகை)கனியும், (குலைகள் நிறைந்த) பாளைகளையுடைய பேரீச்சை மரங்களும் இருக்கின்றன.
12. தொலியால் மூடப்பட்ட தானியங்களும், நறுமணமுள்ள செடியும் (இருக்கின்றன).
13. ஆகவே, (மனு, ஜின் வர்க்கத்தினராகிய) நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

خَلَقَ الْاِنْسَانَ مِنْ صَلْصَالٍ كَالْفَخَّارِ ۙ﴿۱۴﴾ وَخَلَقَ الْجَآنَّ مِنْ
مَّارِجٍ مِّنْ نَّارٍ ۚ﴿۱۵﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۱۶﴾ رَبُّ الْمَشْرِقَیْنِ وَ
رَبُّ الْمَغْرِبَیْنِ ۚ﴿۱۷﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۱۸﴾ مَرَجَ الْبَحْرَیْنِ
یَلْتَقِیٰنِ ۙ﴿۱۹﴾ بَیْنَهُمَا بَرْزَخٌ لَّا یَبْغِیٰنِ ۚ﴿۲۰﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۲۱﴾
یَخْرُجُ مِنْهُمَا اللُّؤْلُؤُ وَالْمَرْجَانُ ۚ﴿۲۲﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۲۳﴾
وَلَهُ الْجَوَارِ الْمُنْشَئٰتُ فِی الْبَحْرِ كَالْاَعْلَامِ ۚ﴿۲۴﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ﴿۲۵﴾ كُلُّ مَنْ عَلَیْهَا فَانٍ ۚۖ﴿۲۶﴾ وَّیَبْقٰی وَجْهُ رَبِّكَ ذُو الْجَلٰلِ
وَالْاِكْرَامِ ۚ﴿۲۷﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۲۸﴾ یَسْـَٔلُهٗ مَنْ فِی السَّمٰوٰتِ
وَالْاَرْضِ ؕ كُلَّ یَوْمٍ هُوَ فِیْ شَاْنٍ ۚ﴿۲۹﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۳۰﴾
سَنَفْرُغُ لَكُمْ اَیُّهَ الثَّقَلٰنِ ۚ﴿۳۱﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۳۲﴾ یٰمَعْشَرَ
الْجِنِّ وَالْاِنْسِ اِنِ اسْتَطَعْتُمْ اَنْ تَنْفُذُوْا مِنْ اَقْطَارِ السَّمٰوٰتِ
وَالْاَرْضِ فَانْفُذُوْا ؕ لَا تَنْفُذُوْنَ اِلَّا بِسُلْطٰنٍ ۚ﴿۳۳﴾ فَبِاَیِّ اٰلَآءِ
رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۳۴﴾ یُرْسَلُ عَلَیْكُمَا شُوَاظٌ مِّنْ نَّارٍ ۙ۬ وَّنُحَاسٌ فَلَا
تَنْتَصِرٰنِ ۚ﴿۳۵﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۳۶﴾ فَاِذَا انْشَقَّتِ السَّمَآءُ
فَكَانَتْ وَرْدَةً كَالدِّهَانِ ۚ﴿۳۷﴾ فَبِاَیِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۳۸﴾

النصف ع ۲۵

14. சுட்டெடுத்த மண் பாண்டத்தைப்போல் (தட்டினால்) சப்தமிடும் களிமண்ணால், அவன் (முதல்) மனிதரைப்படைத்தான்.

15. இன்னும், நெருப்பின் ஜுவாலையினால் அவன் ஜின்னைப் படைத்தான்.

16. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

17. இரு கீழ்த்திசைகளுக்கும் (அவனே) இரட்சகன்; இரு மேல்திசைகளுக்கும் (அவனே) இரட்சகன்.

18. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

19. இரு கடல்களை—அவை இரண்டும் ஒன்றோடொன்று சந்திக்க அவனே விட்டு விட்டான்.

20. (ஆயினும்,) அவை இரண்டுக்கிடையில் ஒரு தடுப்புண்டு; (அத்தடுப்பானதை) அவ்விரண்டும் மீறிவிடாது.

21. ஆகவே, (மனு, ஜின்களே!) நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

22. அவ்விரண்டிலிருந்தே முத்தும், பவளமும் வெளிப்படுகின்றன.

23. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

24. மலைகளைப் போல் (அதன் சில பகுதிகள்) உயர்த்தப்பட்டதாக கடலில் செல்லும் கப்பல்கள் அவனுக்கே உரியன.

25. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

26. பூமியின் மேலுள்ள அனைவரும் அழிந்து போகக்கூடியவர்களே !

27. கண்ணியமும், பெருமையும் உடைய உமது இரட்சகனின் முகம் (அழியாது) நிலைத்திருக்கும்.

28. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

29. வானங்கள் மற்றும் பூமியிலுள்ளோர் (தங்கள் தேவைகளை) அவனிடமே கேட்கின்றனர்; ஒவ்வொரு நாளிலும் அவன் ஒவ்வொரு காரியத்திலும் இருப்பான்.

30. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

31. (மனு, ஜின்களாகிய) இரு வகுப்பார்களே! நிச்சயமாக நாம் உங்(களின்கேள்வி கணக்கு)களை கவனிக்க நாடுவோம்.

32. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

33. ஜின், மனு கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள் மற்றும் பூமியின் ஓரங்களைக் கடந்து சென்றுவிட நீங்கள் ஆற்றல் பெற்றால் (அவ்வாறு) கடந்து சென்று விடுங்கள்; ஆயினும், (மிகப்பெரும் வல்லமையாளனின்) வல்லமையுடனன்றி, நீங்கள் கடந்து செல்லமுடியாது.

34. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

35. (மறுமையில்,) உங்கள் இருவர்மீது நெருப்பின் ஜுவாலையும், புகையும் அனுப்பப்படும். அப்போது (அதனை நீங்கள் தடுத்துக் கொள்ள எவரிலிருந்தும்) நீங்கள் உதவி பெற்றுக் கொள்ளமாட்டீர்கள்.

36. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

37. ஆகவே, (இறுதிநாள் ஏற்படுவதற்காக) வானம் பிளந்துவிடும்போது, அது (உருகிஓடுவதில்) எண்ணெயைப்போல் (சிவப்பில்) ரோஜா நிறமாகிவிடும்.

38. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

فَيَوْمَئِذٍ لَّا يُسْـَٔلُ عَنْ ذَنْۢبِهٖۤ اِنْسٌ وَّلَا جَآنٌّ ﴿۳۹﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ﴿۴۰﴾ يُعْرَفُ الْمُجْرِمُوْنَ بِسِيْمٰهُمْ فَيُؤْخَذُ بِالنَّوَاصِيْ وَ
الْاَقْدَامِ ﴿۴۱﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۴۲﴾ هٰذِهٖ جَهَنَّمُ الَّتِيْ يُكَذِّبُ
بِهَا الْمُجْرِمُوْنَ ﴿۴۳﴾ يَطُوْفُوْنَ بَيْنَهَا وَبَيْنَ حَمِيْمٍ اٰنٍ ﴿۴۴﴾ فَبِاَيِّ اٰلَآءِ
رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۴۵﴾ وَلِمَنْ خَافَ مَقَامَ رَبِّهٖ جَنَّتٰنِ ﴿۴۶﴾ فَبِاَيِّ اٰلَآءِ وقف لازم ع ۲ ۱۲
رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۴۷﴾ ذَوَاتَاۤ اَفْنَانٍ ﴿۴۸﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۴۹﴾ فِيْهِمَا
عَيْنٰنِ تَجْرِيٰنِ ﴿۵۰﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۵۱﴾ فِيْهِمَا مِنْ كُلِّ
فَاكِهَةٍ زَوْجٰنِ ﴿۵۲﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۵۳﴾ مُتَّكِـِٕيْنَ عَلٰى فُرُشٍۭ
بَطَآئِنُهَا مِنْ اِسْتَبْرَقٍ ؕ وَجَنَا الْجَنَّتَيْنِ دَانٍ ﴿۵۴﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ﴿۵۵﴾ فِيْهِنَّ قٰصِرٰتُ الطَّرْفِ ۙ لَمْ يَطْمِثْهُنَّ اِنْسٌ قَبْلَهُمْ وَلَا
جَآنٌّ ﴿۵۶﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۵۷﴾ كَاَنَّهُنَّ الْيَاقُوْتُ وَالْمَرْجَانُ ﴿۵۸﴾
فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۵۹﴾ هَلْ جَزَآءُ الْاِحْسَانِ اِلَّا
الْاِحْسَانُ ﴿۶۰﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۶۱﴾ وَمِنْ دُوْنِهِمَا
جَنَّتٰنِ ﴿۶۲﴾ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۶۳﴾ مُدْهَآمَّتٰنِ ﴿۶۴﴾
فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ﴿۶۵﴾ فِيْهِمَا عَيْنٰنِ نَضَّاخَتٰنِ ﴿۶۶﴾

39. அந்நாளில், மனிதனோ, ஜின்னோ தம் பாவத்தைப்பற்றி(வாய் மொழியாக)க் கேட்கப்படமாட்டார்கள்.

40. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

41. குற்றவாளிகள் அவர்களின் (முக) அடையாளங்களைக்கொண்டு அறிந்து கொள்ளப்படுவார்கள்; பின்னர், முன்நெற்றி முடிகளையும், கால்களையும் கொண்டு பிடி(த்திழு)க்கப்(பட்டு நரகத்தில் எறியப்)படும்.

42. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

43. "குற்றவாளிகள் எதனைப்பொய்யாக்கிக் கொண்டிருந்தார்களோ அத்தகைய நரகம் இதுதான்" (என்று அவர்களுக்குக் கூறப்படும்).

44. அதற்கிடையிலும் கடினமாகக் கொதித்துக் கொண்டிருக்கும் நீருக்குமிடையிலும் அவர்கள் சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

45. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

46. தன் இரட்சகனின் சன்னிதானத்தை பயந்தவருக்கு(ச் சுவனபதியில்) இரு சோலைகளுண்டு.

47. ஆகவே, நீங்கள் இரு வர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

48. (இவ்விரண்டுசோலைகளும்) அடர்ந்த கிளைகளுடையவையாகும்.

49. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

50. அவ்விரண்டிலும் இரு (நீர்) ஊற்றுகள் (உதித்து) ஓடிக் கொண்டிருக்கும்.

51. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

52. அவ்விரண்டிலும் ஒவ்வொரு கனி வர்க்கத்திலும் இரு வகைகள் உண்டு.

53. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

54. அவர்கள் (பட்டு)விரிப்புகளின் மீது (உள்ள பஞ்சணைகளில்) சாய்ந்தவர்களாக (இருப்பார்கள்); அவற்றின் உட்பகுதிகள் 'இஸ்தப்ரக்' (எனும் கனத்த) பட்டினாலுள்ளவையாக இருக்கும்; அவ்விரு சோலைகளில் பழங்கள் (பறிக்க) நெருங்கியிருக்கும்.

55. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்கள் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

56. அவற்றில் கீழ் நோக்கிய பார்வைகளையுடைய (அழகிய) கன்னிகைகளும் இருப்பார்கள்; இவர்களுக்கு முன்னர் அவர்களை எந்த மனிதனும், எந்த ஜின்னும் தீண்டியதில்லை.

57. ஆகவே நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்.

58. (அழகிகளான) அவர்கள் (ஒளியில்) வெண்முத்தையும், (பளபளப்பில்) பவளத்தையும் போன்று இருப்பார்கள்.

59. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்கள் இரட்சகனுடைய அருட் கொடை களில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

60. (உலகத்தில் செய்த) நன்மைக்கு (மறுமையில்) நன்மையைத்தவிர (வேறு கூலி) உண்டா?

61. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

62. அவ்விரண்டுமின்றி (சுவனபதியில் அவர்களுக்கு வேறு) இரு சோலைகளுமுண்டு.

63. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

64. அவ்விரண்டும் கரும்பச்சையான நிறமுடையனவாகும்.

65. ஆகவே, நீங்கள் இருவர்(குப்பார்)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட்கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?

66. அவ்விரண்டிலும், பொங்கிக்கொண்டிருக்கும் இரு ஊற்றுகள் இருக்கும்.

فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٦٧ فِيْهِمَا فَاكِهَةٌ وَّنَخْلٌ وَّرُمَّانٌ ۝٦٨
فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٦٩ فِيْهِنَّ خَيْرٰتٌ حِسَانٌ ۝٧٠ فَبِاَيِّ اٰلَآءِ
رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٧١ حُوْرٌ مَّقْصُوْرٰتٌ فِي الْخِيَامِ ۝٧٢ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ۝٧٣ لَمْ يَطْمِثْهُنَّ اِنْسٌ قَبْلَهُمْ وَلَا جَآنٌّ ۝٧٤ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا
تُكَذِّبٰنِ ۝٧٥ مُتَّكِـِٕيْنَ عَلٰى رَفْرَفٍ خُضْرٍ وَّعَبْقَرِيٍّ حِسَانٍ ۝٧٦ فَبِاَيِّ
اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ ۝٧٧ تَبٰرَكَ اسْمُ رَبِّكَ ذِي الْجَلٰلِ وَالْاِكْرَامِ ۝٧٨ ع ٣ ١٣

## سُوْرَةُ الْوَاقِعَةِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتٌّ وَّتِسْعُوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اِذَا وَقَعَتِ الْوَاقِعَةُ ۝١ لَيْسَ لِوَقْعَتِهَا كَاذِبَةٌ ۝٢ خَافِضَةٌ وقف لازم
رَّافِعَةٌ ۝٣ اِذَا رُجَّتِ الْاَرْضُ رَجًّا ۝٤ وَّبُسَّتِ الْجِبَالُ بَسًّا ۝٥
فَكَانَتْ هَبَآءً مُّنْۢبَثًّا ۝٦ وَّكُنْتُمْ اَزْوَاجًا ثَلٰثَةً ۝٧ فَاَصْحٰبُ الْمَيْمَنَةِ ۙ
مَآ اَصْحٰبُ الْمَيْمَنَةِ ۝٨ وَاَصْحٰبُ الْمَشْـَٔمَةِ ۙ مَآ اَصْحٰبُ الْمَشْـَٔمَةِ ۝٩
وَالسّٰبِقُوْنَ السّٰبِقُوْنَ ۝١٠ اُولٰٓئِكَ الْمُقَرَّبُوْنَ ۝١١ فِيْ جَنّٰتِ
النَّعِيْمِ ۝١٢ ثُلَّةٌ مِّنَ الْاَوَّلِيْنَ ۝١٣ وَقَلِيْلٌ مِّنَ الْاٰخِرِيْنَ ۝١٤
عَلٰى سُرُرٍ مَّوْضُوْنَةٍ ۝١٥ مُّتَّكِـِٕيْنَ عَلَيْهَا مُتَقٰبِلِيْنَ ۝١٦

67. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
68. அவ்விரண்டிலும்,(பற்பல)கனியும், பேரீச்சைகளும், மாதுளையும் உண்டு.
69. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
70. அவைகளில், அழகான முகங்களுடைய, நற்குணமுள்ள கன்னிகைகள் இருப்பர்.
71. ஆகவே, நீங்கள் இருவ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
72. (அவர்கள் தாம் முத்துக்களினாலான) கூடாரங்களில் மறைக்கப் பட்டிருக்கக் கூடிய "ஹூர்"(என்னும் கன்னிகை)கள்.
73. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்களிருவரின் இரட்சகனுடைய அருட் கொடைகளில்எதனைப் பொய்யாக்குவீர்கள்?
74. இவர்களுக்கு முன்னர் அவர்களை எந்த மனிதனும், எந்த ஜின்னும் தீண்டியதில்லை.
75. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும் உங்கள் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
76. (சுவன வாசிகள்) பசுமையான இரத்தினக் கம்பளங்கள், இன்னும் அழகிய விரிப்புகள் மீது சாய்ந்தவர்களாக இருப்பார்கள்.
77. ஆகவே, நீங்கள் இரு வ(குப்பா)ரும்உங்கள் இரட்சகனுடைய அருட் கொடைகளில் எதனைப் பொய்யாக்குவீர்கள்?
78. (நபியே!) மிக்க கீர்த்தியும், கண்ணியமும் உடைய உமது இரட்சகனின் பெயர் மிக்க பாக்கியமுடையது.

---

அத்தியாயம் : 56

## அல்வாகிஆ – மாபெரும் நிகழ்ச்சி

வசனங்கள் : 96 மக்கீ ருகூஃகள் : 3

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. நிகழக்கூடிய (இறுதிநாளான)து நிகழ்ந்துவிடுமானால்_
2. அது நிகழ்வதைப் பொய்யாக்கக்கூடியது(எதுவும்) இல்லை.
3. அது (தீயோரைத்) தாழ்த்தி,(நல்லோரை) உயர்த்திவிடக்கூடியது.
4. பூமி, மிக பலமான அசைவாக அசைக்கப்பட்டால்;
5. இன்னும், மலைகள் தூள் தூளாக ஆக்கப்பட்டுவிட்டால்;
6. அப்போது அவைகள் பரத்தப்பட்ட புழுதிகளாக ஆகிவிடும் (அந்நாளில்);
7. நீங்களும் மூன்று வகையினர்களாக ஆகி விடுவீர்கள்.
8. (முதலாம் வகையினர்) வலப்பக்கத்தார்_ வலப்பக்கத்தாரின் தன்மை என்ன?
9. (இரண்டாம் வகையினர்) இடப்பக்கத்தார்_ இடப்பக்கத்தாரின் தன்மை என்ன?
10. (மூன்றாம் வகையினர் நம்பிக்கைக் கொள்வதில்) முந்திக் கொண்டவர்கள்; (இவர்கள்சுவனத்தின் பால்) முந்திக் கொண்டவர்களாவர்.
11. இவர்கள் தாம் (தங்கள் இரட்சகன் பக்கம் மிக்க) நெருக்கமாக்கப்பட்டவர்கள்.
12. அருட்கொடைகளுள்ள சுவனபதிகளில்(இக்கூட்டத்தினர் இருப்பர்)
13. (இவற்றில்) முன்னவர்களில் ஒரு பெருங்கூட்டத்தினரும்,
14. பின்னுள்ளோரில் ஒரு சொற்பத் தொகையினரும் _
15. பொன்னிழைகளால் ஆக்கப்பட்ட உன்னதக் கட்டில்கள் மீது இருப்பார்கள்.
16. ஒருவரையொருவர் முன்னோக்கியவர்களாக, அவற்றின் மீது சாய்ந்தவர்களாக இருப்பார்கள்.